# <u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு.</u>

## <u>O.S.No.182/2024</u>

| | |
|---|---|
| வாதி தரப்பு சாட்சி | **வா.சா. 1** |
| பெயர் | திரு. பொன்னம்பலம் |
| தந்தை பெயர் | திரு. தங்கவேல் |
| கிராமம் | பெருங்களத்தூர் |
| வட்டம் | தாம்பரம் தாலுக்கா – செங்கல்பட்டுமாவட்டம் |
| தொழில் | சுயதொழில் |
| வயது | 67 |

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16–ஆம் நாளன்று, திரு.M.விக்னேஷ் பிரபு, M.L., கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் 1969–ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u> :**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை முதன்மை சாட்சியமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதனை நான் சொல்லிதான் எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதனை படித்து பார்த்து, வழக்கறிஞர் படித்து சொல்ல சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| 1. | 27-01-2016 | அ.வ.எண்.338/2006 தீர்ப்பாணையின் சான்று நகல் - வா.சா.ஆ.1. |
| 2. | 27-01-2016 | அ.வ.எண்.338/2006 தீர்ப்புரையின் சான்று நகல் - வா.சா.ஆ.2. |
| 3. | 21-08-2024 | எனக்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு - வா.சா.ஆ.3. |
| 4. | 30-08-2024 | நான் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு கொடுத்த பதில் அறிவிப்பு - வா.சா.ஆ.4. |
| 5. | - | நான் கொடுத்த பதில் அறிவிப்பை 1 முதல் 5 பிரதிவாதிகளின் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை - வா.சா.ஆ.5. |
| 6. | - | நான் கொடுத்த பதில் அறிவிப்பை 1-ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை - வா.சா.ஆ.6. |
| 7. | - | நான் கொடுத்த பதில் அறிவிப்பை 2 முதல் 5 பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ளாததால் திருப்பப்பட்ட அஞ்சலக உறை - வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.10. |
| 8. | 29-07-2024 | எனக்கு மஞ்சுளா எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் இணைய வழி நகல் - வா.சா.ஆ.11. |
| 9. | 19-07-2024 | எனக்கு அருண்குமார் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் இணைய வழி நகல் - வா.சா.ஆ.12. |
| 10. | 16-09-2024 | எனது பெயருக்கு வழங்கப்பட்ட கணினி பட்டா (பட்டா எண். 835, 836) முறையே வா.சா.ஆ.13 மற்றும் வா.சா.ஆ.14. |

எனவே, தாவாப்படி தீர்ப்பாக வேண்டி பிராத்திக்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை</u> :**

(1 முதல் 5 மற்றும் 6, 8 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.16 12:10:56 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**